Registered as a News Paper in Sri Lanka  பக்கங்கள்: 04  விலை ரூபா 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02  திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 04  (20 - 07 - 1991)  சனிக்கிழமை  ஓசை: 152

## ஓய்வுபெறும் அதிபர்கள் ஏமாற்றுகின்றனராம்

(நல்லூர்)

இளைப்பாறும் அதிபர்கள் பாடசாலைப் பொருள்களைக் கையளிக்காமல் ஓய்வூதிய வேலைகளைச் செவ்வனே செய்து முடிக்கிறார்கள். அதிபர்கள் இளைப்பாறும் போது அரசாங்கத்திற்குக் கொடுப்பனவு எதுவுமில்லை என்பதை உறுதிப்படுத்திய பிறகு ஓய்வூதியத்திற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு யாழ் (4ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் கடும் எதிர்ப்பைத் தொடர்ந்து
# வெற்றிலைக்கேணிப் பகுதிக்கு
# மேலதிக இராணுவ அணிகள்

## நிலைமையைப் பார்த்த தளபதி உத்தரவு

(கொழும்பு)

வெற்றிலைக்கேணி - கட்டைக்காட்டுப் பகுதியில் தரையிறங்கிய சிறிலங்கா இராணுவத்தின் ஆனையிறவு நோக்கி முன்னேறும் முயற்சிகள் புலிகளின் கடும் தாக்குதலால் முறியடிக்கப்பட்டதையும், இராணுவத்தினருக்கு ஏற்பட்ட பேரிழப்பையும் தொடர்ந்து மேலதிக இராணுவப் பிரிவுகள் இப்பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்காவின் இராணுவத் தளபதி ஹமில்டன் வணசிங்கா நேற்று முன்தினம் வெற்றிலைக்கேணி-கட்டைக்காட்டுப் பகுதிக்கு விஜயம் செய்து நிலைமையை அவதானித்த பின்னரே இம்மேலதிக படை அணிகள் அனுப்பும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

கட்டைக்காடு-வெற்றிலைக்கேணியில் தரையிறங்கிய சிறிலங்கா இராணுவம் இரண்டு தினங்களுக்குள் ஆனையிறவு முற்றுகையில் இருந்து இராணுவத்தினரை விடுவிக்கும் எனச் சிறிலங்கா பாதுகாப்பு அதிகாரிகள் திட்டமிட்டிருந்தனர் காடுகள் அற்ற திறந்த வெளிப்பரப்பில் விமானப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## லெப். கேணல் சூட்டி



கட்டைக் காட்டில் கடந்த 14 ஆம் திகதி மாலை தரையிறங்கிய சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் லெப். கேணல் சூட்டி (இராசா செல்வேந்திரன், கொடிகாமம், சாவகச்சேரி) வீரமரணமடைந்தார். இவர் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயலகத்தின் தமிழீழ இயக்க நூலின் பிரிவின் பொறுப்பாளராகப் பணியாற்றி வந்தவராவார் என்பது குறிப்பிடத்தக்கது.

28 5 67இல் பிறந்த இவர் (4 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரி
## லெப். கேண. அஞ்சலோ பீரிஸ்
## கட்டைக்காட்டில் பலி

(கந்தானை)

சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரியான லெப். கேணல் அஞ்சலோ பீரிஸ் கடந்த 17 ஆம் திகதி புதனன்று கட்டைக்காட்டு மோதலில் கொல்லப்பட்டார் இவரது மரணச் சடங்குகள் நேற்றுமாலை கந்தானையில் நடைபெற்றது. கத்தோலிக்க தேவாலயத்தில் திருப்பலிப் பூசையும் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இவர் 1985 ஆம் ஆண்டு பண்டிதர் வீரமரணமடைந்த அச்சுவேலித் தாக்குதலுக்குத் தலைமை தாங்கினார். 1987-ஆம் ஆண்டு காலப் பகுதியில் நாவற்குழி சிறிலங்கா இராணுவ முகாம் பொறுப்பாளராகக் கடமையாற்றினார் இந்திய அமைதிப்படையின் வருகையை அடுத்து மட்டக்களப்பு இராணுவ முகாமிற்குப் பொறுப்பாளராக மாற்றம் பெற்றார்.

## கட்டைக்காட்டில் 15 இராணுவம் பலி

(கொழும்பு)

கட்டைக்காடு- வெற்றிலைக் கேணிப்பகுதியில் நேற்று முன்தினம் நடந்த சண்டையில் இராணுவத் தரப்பில் பதினைந்து பேர் கொல்லப்பட்டதாக சிறிலங்கா இராணுவத் தளபதி ஹமில்டன் வணசிங்காவை மேற்கோள் காட்டி லங்காபுவத் செய்தி வெளியிட்டுள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டைக்காட்டுப் பகுதியில் தொடர்ந்தும் குண்டுவீச்சு

(கட்டைக்காடு)

வெற்றிலைக்கேணி - கட்டைக்காட்டுப் பகுதியிலிருந்து ஆனையிறவு நோக்கிச் செல்லப் பிரயத்தனம் மேற்கொள்ளும் படையினர் நேற்றுத் தமது முயற்சியைத் தொடர வில்லை தாங்கள் தரித்துநின்ற இடத்திலிருந்து ஒரு அடிதானும் முன்னேற முயற்சிக்காமல் அந்த இடத்திலேயே நின்றனர் ஆயினும் ஆட்டிலெறி இருதரப்பிலும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உலங்கு வானூர்தியும் விமானமும் சேதம்

(யாழ்ப்பாணம்)

வெற்றிலைக்கேணி - கட்டைக்காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கடுமையான தாக்குதல்களால் நேற்று முன்தினம் ஒரு குண்டுவீச்சு விமானமும், ஒரு உலங்கு வானூர்தியும் பலத்த சேதமடைந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிப்பதாகப் புலிகளின் குரல் நேற்றிரவு அறிவித்தது.

வெற்றிலைக்கேணி-கட்டை (4 ஆம் பக்கம் பார்க்க)

## சங்கங்களுக்காக வங்கி திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மக்கள் வங்கிக் கிளைகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் அலுவல்களுக்காக வரும் திங்கட்கிழமை 22 ஆம் திகதி முதல் திறந்திருக்கும் என்று பிரதேச முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கிளைகளில் கணக்கு வைத்துள்ள சங்கங்கள் சம்பந்தப்பட்ட வங்கி முகாமையாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## பெற்றுக் கொள்ளவும்

ஒரு தொகைப் பணத்துடன் பர்ஸ் ஒன்று அடையாள அட்டையுடன் வீதியில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

## மக்களின் பேராதரவு உற்சாகம் ஊட்டுகின்றது

எமது மண்ணை எதிரியிடமிருந்து மீட்டெடுப்பதற்கான போர் முன்னொருபோதும் இல்லாத அளவிற்கு உக்கிரமாக நடந்துகொண்டிருக்கும் இவ்வேளையில் பொதுமக்களின் பேராதரவு பிரவாகமாக ஊற்றெடுத்துள்ளமை எமக்கு மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் ஊட்டுகின்றது என விடுதலைப்புலிகள் மக்கள்முன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிறுநாவற் குளத்தில் இராணுவம் மீது தாக்குதல்

(மன்னார்)

வவுனியாவில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முன் தினம் காலை 11 - 30 மணியளவில் நாகதாழ்வுளன்னு மிடத்திற்கு முன்னேறி வந்து துப்பாக்கிப் பிரயோகமும் எறிகணைத் தாக்குதலும் மேற்கொண்டுவிட்டு முகாமுக்குத் திரும்பிச் சென்றுள்ளதாகத் தெரிய வரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவிலிருந்தும் முன்னேற முயற்சியாம்

(கொழும்பு)

முல்லைத்தீவில் இருந்து யாழ் வீதி வழியே முன்னேற சிறிலங்கா இராணுவத்தினர் முயற்சி எடுக்கிறார்கள் என கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆனையிறவு மோதல் நடைபெறும் அதேவேளை முல்லைத்தீவில் வடக்கே யாழ். வீதி வழியாக கொக்குவேலியிலிருந்து மற்றொரு சிறிலங்கா இராணுவப்படையினர் விடுதலைப்புலிகளுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பிரான்ஸ் விமானநிலையங்களில் இலங்கையர் மீது கட்டுப்பாடு

(கொழும்பு)

பிரான்ஸ் நாட்டு விமானத்தளத்தில் இறங்கி அடுத்த விமானத்திற்கு மாறச் செல்வதானால் கூட இனிமேல் இலங்கையர் அனைவரும் இதற்கான தனி விசாவைப்பெற வேண்டும். இவ்வாறு கொழும்பில் உள்ள பிரான்ஸ் தூதுவரகம் அறிவித்துள்ளது. இத்தகைய தனி விசா எடுக்கா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

தேவை

நாற்று மேடைக்குச் செம்மண் (செம்பாட்டுமண்) ஒரு வான்ட் மாஸ்டர் பெட்டி கொள்ளளவு தேவைப்படுகிறது. தொடர்பு கொள்ளவும்: மில்க்வைற் யாழ்ப்பாணம். (B/2821)

---

பட்டப்படிப்புகள் கல்லூரி

### அறிவித்தல்

விசேட விரிவுரை; அரச அறிவியல்

(20 மணித்தியாலங்கள்) B. A & G. A. Q.

பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளரால் வழங்கப்படும்

ஆரம்பம் 19.7.1991 காலை 10 மணி

(B-2831)

---

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய

### அழைப்பிதழ்

அன்புடையீர் !

அமரத்துவம் எய்திய எமது குடும்பத்தலைவர்

தவில் வித்துவான்

**என். ஆர். சின்னராசா**

அவர்களின்

அந்தியேட்டிக்கிரியைகள் எதிர்வரும் 20-07-1991 சனிக்கிழமை காலையிலும், வீட்டுக்கிருத்தியம் 21-07-1991 ஞாயிற்றுக்கிழமை பகல் 10-00 மணிக்கும் எமது இல்லத்தில் நடைபெற உள்ளன. இவ்விரு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு எம்மவர் தலைவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கந்தசாமி கோயில் வீதி,
இணுவில்.
(B.2830)

இங்ஙனம்
அன்னை, மனைவி,
மக்கள், மருகர்.

---

மருந்துத் தட்டுப்பாட்டால்

## நோய்த் தடுப்பு சக்தி பலவீனமடையும் நிலை

(யாழ்ப்பாணம்)

தொடர்ச்சியாக யாழ். மாவட்டத்தில் ஒரு வருட மருந்து தட்டுப்பாடு நிலவிய தால் இதன் பின்விளைவாக வடபகுதி மக்களின் உடலில் நோய்த் தடுப்பு சக்தி வெகுவான பலவீன நிலையை எட்டி உள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அண்மையில் கொழும்பில் முக்கிய சில பகுதிகளில் வாந்திபேதி நோய் பரவியிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இதே போல யாழ் நகரில் விரைவில் இத்தகைய ஒரு நிலை தோன்றினால் பயங்கரத்தக்கதாக இருக்காது. பொதுவாக தென்பகுதியில் மருத்துவ வசதிகள் போதுமான அளவு இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. இருந்தும் அங்கு மலேரியா வாந்திபேதி என்பன அதிகரித்துக் காணப்படுகின்றது. ஆனால் வடபகுதியில் மருத்துவ வசதிகள் குறைவாக இருக்கிறது மட்டுப் படுத்தப்பட்ட முறையிலேயே மருந்துப் பொருள்கள் கொண்டுவரப் படுகின்றன. இதனால் நீண்டகால சுகாதாரக் கேடான நிலையே வடபகுதியில் உருவாகும் என்றும் தெரிவிக்கப் பட்டது.

மேலும் சுமார் எழுபது வீதமான யாழ். மாவட்ட மக்கள் இந்த நிலையை எட்டி உள்ளதாகவும். இது பெரும்பாலும் அரைகுறை மருத்துவ சேவையினாலேயே ஏற்பட்டுள்ளது என்றும் இந்த நிலையில் வடபகுதியில் தொற்று நோய் ஒன்று தோன்றுமானால் வெகுவேகமாகப் பரவும் ஆபத்து உள்ளது என்றும் கூறப்பட்டது.

(வே)

---

## விசேட அறிவித்தல்

தற்கால நாட்டு நிலைமை காரணமாக

**21-7-91இல்**

யாழ். கைலாசபதி கலையரங்கில்

மேடையேற இருந்த

புலவர்

செ. து. தெட்சணாமூர்த்தியின்

**இந்த மண்**
**எங்களின் சொந்தமண்**

என்னும் வரலாற்று நாடகம்

பின்போடப்பட்டுள்ளது

என்பதை அறியத் தருகின்றோம்

மேடையேறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்

(R-1563) -கந்தர்மடம் சனசமூக நிலையம்

---

## கேகாலையில் 16 பேர் பலி

(கொழும்பு)

கேகாலையில் கலைவிஸ்பிறிட் அருந்தி பதினாறு பேர் உயிர் இழந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கேகாலை ஆஸ்பத்திரியில் 30 பேர் வரை ஸ்பிரிட் அருந்தி ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## 6000 பேர் விடுதலை

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸின் உண்ணாவிரதத்தை அடுத்து முன்னெச்சரிக்கையாக கைது செய்யப்பட்ட சுமார் 6000 பேரை உடனடியாக விடுதலை செய்யுமாறு அரசு உத்தரவிட்டுள்ளது. இதனை முதல்வர் செல்வி ஜெயலலிதா தெரி[illegible]

---

## நினைவஞ்சலி



வீரமரணம்

12 - 7 - 91

### கப்டன் உதயகுமார்

(ஆறுமுகம் தனபாலசிங்கம்)

(ஆனையிறவு முகாம் மீதான தாக்குதலில் வீரமரணம்)

அஞ்சிடா வீரர் எங்கள்
விலங்கினை ஒடிக்க வந்த
வேங்கைகள் நீங்கள் அன்றோ
மண்ணுக்கும் மக்களுக்கும்
கண்ணுக்கும் கண்ணாய் நிற்கும்
மாவீரர் நீங்கள் எங்கள்
மனங்களில் என்றும் வாழ்வீர்

3ஆம் கட்டை
திருக்கோணமலை
(B-2831)

குடும்பத்தினர்
நண்பர்கள்

---

## நினைவு கூருகின்றோம்...

**1991-07-20**

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரமரணமெய்திய

- செல்வராசா சோதிநாதன் (தன்னாமுனை, மட்டக்களப்பு)

1987ஆம் ஆண்டு வீரமரணமெய்திய

- வேலாப்போடி தேவகதி (ஆயித்தியமலை)
- கதிர்காமத்தம்பி கிருஷ்ணவேணு (ஆயித்தியமலை)
- கிருஷ்ணபிள்ளை இன்பராசா (சல்லிப்பிட்டி)
- மோகன் (ம. மோகனதாஸ் - மணற்சேனை)

சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய

சுரேஷ் (ஐ. புலேந்திரன்)

மட்டக்களப்பு கோரகல்லிமடுவில் சிறிலங்காப் படையினரால் எரிக்கப்பட்ட வீட்டினுள் கருகி மாண்ட 3 வயதுக் குழந்தை

1990ஆம் ஆண்டு உலங்கு வானூர்தியின் தாக்குதலினால் வீரமரணமெய்திய

சேவியர் (ஐயம்பிள்ளை இரத்தினபாலசிங்கம் - 98, ஹட்சன் வீதி, மட்டக்களப்பு)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- மேற்குறிப்பிட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B-2825)

---

## உடனடி விற்பனைக்கு

- தையல் மெஷின்கள்
- கிரைண்டர்கள்
- மணிக்கூடுகள்
- றேடியோக்கள்
- அயன்பொக்ஸ்
- காஸ் குக்கர்
- எலக்ரிக் குக்கர்
- பெற்றோல்மக்ஸ்
- மின்விசிறிகள்
- சூட்கேஸ்
- றங்பெட்டிகள்
- மின்சார தண்ணீர் பம்

முதலியன மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: உரிமையாளர்

**நவநீதம்**

161, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(B/2828)

# வட்டுக்கோட்டையில் மாவீரருக்கு அஞ்சலி

கட்டைக்காடு வெற்றிலைக்கேணி ஆகிய பகுதிகளில் சிறிலங்காவின் முப்படைகளுடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த வீரவேங்கைகளான சஜன் (சுந்தரராசா மகேஸ்வரன் அராலி), சுதா (அர்ச்சுதன் மகேந்திரம் திருக்கோணமலை), குமுதன் (வைத்திலிங்கம் தயாளன் சிறப்பிட்டி), மோகன் (ஆறுமுகம் அரசரத்தினம் மூதூர்), குரு (பரராசசிங்கம் விமலேஸ்வரன் யாழ்நகர்)

கோகிலா குணநாயகம் மங்கையர்திலகம் திருக்கோணமலை), விஜிதா (சின்னப்பு சிவராகினி உரும்பராய்), சைமன் ஜேசப் (மக்சன்சி பிரதீப் மானிப்பாய்), ஆகியோரது பூதவுடல்கள் இன்று வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் வித்தியாசாலையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான மக்கள் மாவீரர்களின் பூதவுடல்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இங்கு நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்க முன்னணி பிரமுகர்களான குகதாசன் மாஸ்டர், செல்லம் அண்ணா, ரஞ்சன் மாஸ்டர், ஆர்த்தி அக்கா உட்பட பலர் உரையாற்றினர். கூட்டத்திற்கு வட்டுக்கோட்டை பிரதேசப் பொறுப்பாளர் விதுரன் தலைமை வகித்தார்.

மறைந்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள வியாபார நிலையங்கள் பாடசாலைகள் அனைத்தும் இன்று மாலை மூடப்பட்டன

அங்கிருந்து மாவீரர்களின் பூதவுடல்கள் கோப்பாய் மாவீரர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன. (20)

# பேயாடிக் கூழாங்குளத்தில் பெண் பலி; இருவர் காயம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் பொதுமக்கள் மீது கண்மூடித்தனமான முறையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் தமிழ்ப் பெண் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றைய தினம் காலை ஒன்பது மணியளவில் பேயாடி கூழாங்குளத்தில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் முகாமில் இருந்து 75 யார் முன்னோக்கி வந்தே இத் தாக்குதலை நடாத்தியுள்ளதாகத் தெரிகிறது.

கப்டைக் காட்டுப்பகுதியில்

துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டன. வெற்றிலைக்கேணி - கட்டைக்காட்டுப் பகுதியில் சிறிலங்கா அரச துருப்புக்கள் தரையிறக்கப்பட்ட பின் நேற்று மட்டுமே ஏனைய நாட்களை விட மோதல் குறைவாக இருந்தது.

இதேவேளை குண்டுவீச்சு விமானங்களும், உலங்குவானூர்திகளும் ஏனைய நாட்களைப் போன்றே தமது தாக்குதல்களை நடாத்திக் கொண்டிருந்தன. போராளிகளும் விமானங்கள் மீது எதிர்த் தாக்குதலை நடாத்தினர். நேற்றைய இராணுவ நடவடிக்கைகளின் போது மூன்று போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

கப்டைக் காட்டில்

சிறிலங்கா இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஹமில்டன் வனசிங்க நேற்றுமுன்தினம் இப்பகுதிக்குச் சென்று திரும்பியதாகவும் அவர் படையினர் பெருமளவு வீரத்தோடும், தைரியத்தோடும் போரிடுவதாக கூறியதாகவும் ரூபவாகினி செய்தி வெளியிட்டது.

இதேவேளை தினசரி காயமடைந்த பல இராணுவத்தினர் விமான மார்க்கமாக கொழும்பில் கொண்டு வந்து இறக்கப்படுவதாக பி. பி. சி. நேற்றிரவு தெரிவித்தது

# வகுப்புக்களை ஒத்தி வைக்கவும்

(தமது நிருபர்)

போர்க் காலச் சூழலுக்கு ஏற்ப சகல தனியார் கல்வி நிலையங்களும் மறு அறிவித்தல் வரை எல்லா வகுப்புகளையும் ஒத்திவைக்கும் படியும், போர்க்காலச் சூழலுக்கேற்ற ஒத்துழைப்புகள் வழங்கும் படியும் தனியார்கல்விநிலையஒன்றியச் செயலாளர்வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிறுநாவற்

குளம்:

இதே இராணுவத்தினர் நேற்றையதினம் காலை 8-30 மணியளவில் சிறுநாவற் குளம் என்னும் இடத்திற்கு முன்னேற முயன்ற போது விடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இத் தாக்குதலால் இராணுவத்தினர் மேலும் முன்னேற முடியாமல் அவ்விடத்திலேயே நிலைகொண்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# அஞ்சல் அலுவலகர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மட்டுப்படுத்தப்பட்ட அஞ்சல் சேவையை ஏற்படுத்த, அஞ்சல் அலுவலகங்களை இயக்குவது தொடர்பாக ஆலோசனை நடத்த வரும் திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் பிரதம அஞ்சலகத்தில் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

பொறுப்பு அஞ்சல் அதிபர்கள், உதவி அஞ்சல் அதிபர்கள், உப அஞ்சல் அதிபர்கள், சிற்றூழியர்கள், பதிவு செய்யப்பட்ட பதிலாட்கள் அனைவரையும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் சபாரத்தினம் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

விமான

ஓடுதளம் இவர்கள் விமானத்தை விட்டு தரையிறங்க அனுமதிக்கப்படமாட்டார்கள் பிரான்ஸ் ஊடாக வேறு நாடுகளுக்குச் செல்வதாகக் கூறிப் பின்னர் பிரான்ஸிலேயே இறங்கி அரசியல் தஞ்சம் கோருபவர்கள் அதிகமாகவுள்ளமையினாலேயே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரான்ஸ் தூதுவராலயம் கூறியுள்ளது.

லெப். கேணல் சூட்டி

இயக்கத்தில் இணைவதற்கு முன்னர் நீண்டகாலம் உதவியாளராகச் செயற்பட்டு வந்தவர். மிகக் கடுமையான உழைப்பாலும், இந்திய, சிறிலங்கா இராணுவங்களுடன் நடைபெற்ற சண்டைகளில் திறமையாகப் போரிட்டதாலும் மிக விரைவில் இயக்கத்தில் பல்வேறுபொறுப்புகளை வகித்தவராவார். இவரது இரு சகோதரர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பில் அங்கம் வகிக்கின்றனர்.

முல்லைத்தீவிலிருந்தும்

திருப்பதாக சிறிலங்கா காடுபு வட்டாரங்களை ஆதாரம் காட்டி கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

உலங்கு

காட்டுப் பகுதியில் முழுமையாகத் தாக்குதலுக்கு மத்தியில் கவசவாகனங்கள் சகிதம் முன்னேற முயன்ற இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் கடுமையான தாக்குதல் நடத்தியுள்ளனர் எனவும் மேலும் புலிகளின் குரல் தெரிவித்தது.

வெற்றிலைக்கேணி

படையின் உதவியுடன் இராணுவம் முன்னேறும் எனவும் திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால் சிறிலங்கா இராணுவம் எதிர்பார்த்ததை விட பலமான எதிர்ப்புக்களைச் சந்தித்ததோடு புலிகள் மிக நெருக்கமாக நின்று தாக்குதல் நடத்துவதினால் இராணுவம் சிலயார்கள் தூரம் முன்னேறுவதற்கும்பெரும்பிரயத்தனத்தையும், இழப்புக்களையும் சந்திக்க வேண்டியுள்ளது எனவும்பாதுகாப்புவட்டாரங்களில் இருந்து தெரியவருவதாகவும் ஏஜென்சி செய்திகள் குறிப்பிட்டன.

மேலும் இம் மோதலில் சில உயர் இராணுவ அதிகாரிகள் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டும் நூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் படுகாயமடைந்தும் பல இராணுவ கவச வாகனங்கள் அழிக்கப்பட்டும் உள்ளன இந்த இழப்புக்களை ஈடுசெய்வதற்கும், மேலதிகதேவையை பொறுத்தமே மீண்டும் இராணுவஅணிகளை அனுப்பி வைப்பதற்கு ஹமில்டன் வனசிங்கா உத்தரவிட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது

கடைசியாகநேற்றிரவுகிடைத்த செய்திகளின்படி பல நூறு இராணுவத்தினர் கடல்மார்க்கமாக வெற்றிலைக்கேணி வந்து சேர்ந்ததாகத் தெரிய வருகின்றது.

## ராஜீவ் கொலைக்கான

# ஒத்திகை வீடியோ கசற் கைப்பற்றப்பட்டுள்ளதாம்

(சென்னை)

ராஜீவ் காந்தியை கொலை செய்தவர்களின் ஒத்திகைப் பட வீடியோ கசற் ஒன்று இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவிற்கு கிடைத்துள்ளதாக அப்பிரிவு அறிவித்துள்ளது

பாதுகாப்பை மீறி அரசியல் தலைவர் ஒருவரை கொலையாளிகள் எவ்வாறு நெருங்கலாம் என்பதை பரீட்சித்துப் பார்க்கும் நோக்கமாக முன்னாள் பிரதமர் வி. பி. சிங் சென்னையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பேசியபோது ஒத்திகை பார்ப்பதற்காக எடுக்கப்பட்ட வீடியோ கசற்றே விசாரணையாளர்களுக்கு கிடைத்ததாக மத்திய புலனாய்வுக் குழுவினர் தெரிவித்தனர்.

# புலிகளின் உறவுகள்பற்றி விசாரணை வேண்டும்

(டில்லி)

தமிழக அரசியல்வாதிகளுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்புகள் உள்ளனவா என்பது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று லோக் சபையில் நேற்று ஜெயந்தி நடராஜனும், சுப்பிரமணியசுவாமியும் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து சபையில் சிறிது நேரம் அமளி நிலவியது.

# உணவுப் பொருள்களுக்காக அவசர செய்தி

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கான அத்தியாவசிய உணவுப் பொருள்களை உடனடியாக அனுப்பி பட்டினிச் சாவிலிருந்து மக்களைக் காப்பாற்றுமாறு சிறிலங்கா ஜனாதிபதியின் காரியதரிசிக்கு யாழ் அரசாங்க அதிபர் அவசர செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் கையிருப்பில் இல்லை எனவும் ஏற்கனவே இருந்தவைகூட தேவையை விட மிகக் குறைந்த அளவிலேயே வழங்கப்பட்டு வந்ததாகவும் ஊரடங்கு உத்தரவைத் தொடர்ந்து உணவுக்கப்பல்கள் பொருள்களை இறக்காது திரும்பிச் சென்றமையும் அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. உடனடியாக அனுப்பத் தவறினால் உணவுப் பஞ்சம் ஏற்படும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ச)

## அச்சுவேலியில் ஹெலி தாக்கு

# தந்தையும் மகனும் பலி; மனைவி உட்பட ஐவர் காயம்

(அச்சுவேலி)

அச்சுவேலியில் நேற்றிரவு ஹெலியில் இருந்து மேற்கொள்ளப்பட்ட றொக்கட் தாக்குதலில் தந்தையும், மகனும் பலியாகியுள்ளனர். ஐவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றிரவு ஒன்பது மணியளவில் ஹெலியில் இருந்து வீசப்பட்ட றொக்கட்டொன்று அச்சுவேலி தெற்குப் பகுதியிலுள்ள குடிசை வீடொன்றில் வீழ்ந்து வெடித்ததில் அங்கிருந்த நல்லையா ஆறுமுகம் அவரது மகன் ஆறுமுகம் கணேசு ஆகிய இருவரும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். அவர்களின் குடிசை வீடும் முற்றாக சேதமடைந்துள்ளது. இச்சம்பவத்தில் ஆ. சரஸ்வதி. ஆ. கலைரூபி, ஆ. கலைமகள். ஆ. கலை மோகனதாஸ், கந்தசாமி ஆகியோர்படுகாயமுற்ற நிலையில் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (மு)

# இஸ்ரேலின் தாக்குதல்

தெற்கு லெபனான் பகுதியிலுள்ள ஷியா முஸ்லிம்கெரில்லாக்களின் கேந்திர நிலையங்கள் மீது கடந்த புதன் கிழமை இஸ்ரேலிய விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளன இத் தாக்குதலில் ஆறு இஸ்ரேலிய விமானங்கள் சுமார் நாற்பத்தைந்து நிமிட நேரம் ஈடுபட்டன. இரு தடவைகள் தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேலியத் தளபதிகள் கூறியுள்ளனர்

மக்களின்

பணி நேற்றுவிடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது

மேலும் அவ்வறிக்கையில் போரை முன்னெடுத்துச் செல்வதற்கு தற்போது அவசிய தேவையான வெற்றுச்சாக்கு. சாக்கூசி, உரப்பை., மண்வெட்டி, சவள், பிக்கான் போன்ற உபகரணங்களைத் தாராளமாக வழங்கிவருவதன் மூலம் பொதுமக்கள் உற்சாகமாக ஈடுபட்டு வருகின்றார்கள் எனினும் மண்வெட்டி. சவள் போன்ற உபகரணங்கள் மேலும் தேவைப் படுவதால் கூடியஎண்ணிக்கையில் வழங்குமாறு வேண்டுகின்றோம்.

போர் முனையில் போராளிகள் உண்பதற்கு ஏதுவாகத் தயாரிக்கப்பட்ட அறுசுவை சிற்றுண்டி வகைகளை வழங்கி வருவதன்மூலம் பொதுமக்கள் தங்கள் பாசஉணர்வை வெளிக்காட்டி வருகின்றார்கள் இவைகளுள் சிலவகைச் சிற்றுண்டிகள் குறுகிய கால எல்லைக்குள் பழுதடைந்து போகக்கூடியவைகளாகையால் பகோடா, முட்டை மா வு. சிப்பி,முறுக்கு,மிக்சர் போன்ற நீண்ட காலத்திற்குப் பேணக் கூடிய உணவுகளையே தயாரித்து வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மக்கள் வழங்கும் நன்கொடைகள் யாவும் எமது செயலகங்களில் வந்து குவிந்த வண்ணம் இருக்கின்றன. இவைகளை ஒரு ஒழுங்கு முறையில் பெற்று,வழங்குவதற்குத்திட்ட அடிப்படையில் செயலாற்ற வேண்டிய கட்டாய தேவை ஏற்படுகிறது

எனவே பொது நிறுவனங்களும், பொதுமக்களும் தங்கள் பங்குகளை அளிக்க முன்வரும்போது சம்பந்தப்பட்ட கிராமசபைத் தலைவர்/செயலாளருடன் தொடர்பு கொண்டு ஒன்றிணைந்து ஒரே செயற்றிட்டம் மூலம் ஒழுங்கு முறையில் செயற்பட்டு எமது கிராம, வட்ட, மாவட்டச் செயலகங்களில் வழங்குமாறு வேண்டுகிறோம்'

உபகரணங்கள், சிற்றுண்டி வகைகள் வழங்க முன்வரும் பொதுமக்கள் எமது மாவட்டப் பொறுப்பாளரால் ஒப்பமிடப்பட்ட அடையாள அட்டை காண்பிப்பவர்களிடமே வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்

சாரம், படுக்கைவிரிப்பு, படுக்கைமெத்தை, தலையணை போன்ற நன்கொடைகளை ஆஸ்பத்திரிவீதியில் அமைந்துள்ள பாலம் பொதுப்பணி மன்றத்தில் வழங்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

ஒய்வு பெறும்

பிரதேசக் கல்விப் பணிப்பாளருக்காக கணக்காளர் ஒய்வூதியக் கிளைத் தலைவரையும், சம்பந்தப்பட்ட ஏனைய அதிகாரிகளையும் கேட்டுள்ளார்.

1990ஆம் ஆண்டிற்கான வருடாந்தக் கணக்கெடுப்பு நடவடிக்கையில் இருந்து பாடசாலைக்கு ஏற்பட்ட இழப்புகள் சம்பந்தமாக அதிபர்கள் கல்வித் திணைக்களத்திற்கு இழப்புகள் பற்றி அறிவிக்கப்பட்டதென பொருட் பதிவேட்டில் ஓர் பதிவைச் செய்து கொள்கிறார்கள். இதன் பிரகாரம் பொருட் பதிவேடுகளையும் சமப்படுத்தியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ் வகையில் சமப்படுத்திய பொருட் பதிவேட்டு மீதிகளை புதிய அதிபரிடம் கையளித்து விடுகிறார்கள். பொருட் பதிவேட்டின்படி பொருள்கள் அனைத்தும் கையளிக்கப்பட்டதாக பொறுப்பேற்கும் அதிபரிடம் கடிதம் ஒன்றைப் பெற்றுக்கொண்டு ஒய்வூதிய நடவடிக்கைகளை செவ்வனே செய்து முடிக்கிறார்கள் என்று 8 ஜூலை 91 திகதியிட்ட அக்கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது அதுதவிர பிரதிகள் கோட்டக் கல்வி அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

இழப்புத் தொடர்பான நி. பி 104 இன் கீழ் உள்ள நடவடிக்கைகள் அனைத்தும், இழப்பு ஏற்பட்டபோது உள்ள அதிபராலேயே செய்து முடிக்கப்பட வேண்டிய கருமமாகும் பாடசாலை அதிபர்களின் விடயத்தில் ஒய்வூதியம் வழங்குவது தொடர்பான நடவடிக்கை எடுக்கும்போது, ஒய்வூதியம் பெறும் அதிபரிடமிருந்து அரசாங்கத்திற்கு கருமதி ஏதும் இல்லை எனத் தெரிக்கும் சான்றிதழைப் பெற்றுக்கொண்டு ஒய்வூதிய நடவடிக்கை எடுப்பது அவசியமாகும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.